# திராவிட முன்னேற்றக் கழகம்

## அன்றும் - இன்றும் - என்றும் இளைஞர்களின் இனமானப் பாசறைதான்!

திராவிட முன்னேற்றக் கழகமும் தாய்க் கழகமான திராவிடர் கழகமும், ஒரே திசை வழியில் சமூக பொருளாதார கல்வி பெண்ணுரிமை சாதி மத வேறுபாடற்ற பகுத்தறிவுள்ள சமத்துவ சகோதரத்துவ சமுதாயம் என்ற அடிப்படைக் கட்டமைப்புக்கள், அனைத்து மக்களுக்குமானதாகவும், சமத்துவமாகவும், மக்களாட்சியின் மூலம் பெற்றிட வேண்டுமென தந்தை பெரியார் பேரறிஞர்அண்ணா ஆகிய சிந்தனையாளர் களால் உருவாக்கப்பட்ட இயக்கங்கள் என்பதை தமிழ்நாட்டின் வரலாறு தெளிவாகப் பதிவு செய்துள்ளது. இன்றைய இந்த சமுதாய அரசியல் அடிப்படைக் கட்டமைப்புகள் எந்த அளவிற்கு, திராவிட இயக்கங்களின் பல்லாண்டுகாலப் பிரச்சாரங்களின் பயனாகவும், அரசியல் அதிகாரத்தின் உரிய அமலாக்கத்தாலும், அடித்தட்டு மக்களுக்கும் விளிம்பு நிலை மக்களுக்கும் இதன் தாக்கம் சென்றடைந்திருக்கிறது என்பதை எந்த சக்தியாலும் எந்தக் காலத்திலும் மறைக்கவோ, மறுக்கவோ இயலாது.

இந்திய ஒன்றிய நிலப்பரப்பில் விடுதலைக்குப் பின்னர், அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய மாநிலமாக உருவாகியிருப்பதற்கு; திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்கு என்பது மகத்தானது மட்டுமல்ல வியப்பிற்குரியது! தமிழ்நாடு இந்த உயர்ந்த நிலையை அடைந்ததற்கு திராவிட முன்னேற்றக் கழகம் பயணித்த வழித்தடங்கள் கரடுமுரடானவை என்பது தமிழ்நாட்டின் வரலாற்றை அறிந்தவர்களுக்குத் தெளிவாகவே புரியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் அத்தகைய தடைகளைத் தகர்த்து தொடர்ந்து அரசியல் பயணத்தை அச்சமின்றி மேற்கொண்டுவரும் ஓர் உயிரோட்டமுள்ள இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். ஆம்! தமிழ் மண்ணுக்கும் தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் என்றும் அரணாகவும், அகழியாகவும் அகலாது நிலைத்து நின்று பாதுகாக்கும் இயக்கமாகும்.

1925 ஆம் ஆண்டு தந்தை பெரியாரால் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் தொடர்ந்து நீதிக்கட்சியின் வழியாக 1944 ஆம் ஆண்டு திராவிடர் கழகமாகப் பரிணாம வளர்ச்சி பெற்று, 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள், திராவிட முன்னேற்றக் கழகமாக சமூக அரசியல் களத்தில் தன் பணியினை அடையாளப்படுத்திக்கொண்டு, 1957ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் தொடங்கி, அரசியல் வெற்றி தோல்விகளுக்குப் பின்னரும் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டிலும், இந்திய ஒன்றியத்திலும் ஒரு நிராகரிக்க முடியாத நிரந்தர அரசியல் சக்தியாக தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பது இந்த இயக்கத்தின் வரலாறாகும். தேர்தல் தோல்விகண்டு துவண்டு போகாமலும், வெற்றி கண்டு வெறியாட்டம் கொள்ளாமலும், அரசியல் பண்பாட்டுடன் தொடர்ந்து மக்கள் பணியாற்றிடும் திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த காலங்களில் சந்திக்காத சந்தர்ப்பங்களே இல்லை, எதிர்கொள்ளாத பிரச்சினைகளும் இல்லை.



**பொன். முத்துராமலிங்கம்,**
முன்னாள் அமைச்சர்,
உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்

இந்த இயக்கம் ஒரு மாநிலக் கட்சி என்று கருதப்பட்டாலும், அகில இந்திய அரசியல் களத்தில் இந்திய அரசியல் சட்டம் வடிவமைத்துள்ள ஜனநாயக் குடியரசிற்கு (Democratic Republic) அவசரகால பிரகடனத்தின் (Declaration of Energy) மூலம், பேராபத்தை உருவாக்கிய காலகட்டத்தில் அந்தக் கொடிய நகர்வை எதிர்த்து மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபட்டு ஜனநாயக் குடியரசைக் காப்பாற்றிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை வரலாறு பதிவுசெய்திருக்கிறது.

ஈழத்தமிழர்களின் வாழ்க்கை சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டபொழுது, ஈழத்தமிழர்களுக்காக பலபோராட்டக் களங்களை எதிர்கொண்டு கழக ஆட்சியே விலையாக கொடுத்த இயக்கமும்தான் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, திராவிட முன்னேற்றக் கழகம் என்பது தேர்தல் வெற்றி, தோல்விகளின் தாக்கத்தால் கழகத்தின் பயணத்தில் என்றும் வேகம் குறையாது. மாறாக, வேகமும் வீரியமும் பன்மடங்கு அதிகரிக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நெடிய இந்த தொடர் பயணத்தில் எதிர்கொண்ட எத்தகைய சூழ்நிலைகளும், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இந்த வரலாற்றுப் பேரியக்கத்திற்கு எத்தகைய சிதைவினையும் ஏற்படுத்த இயலவில்லை, இனியும் ஏற்படுத்த இயலாது என்பது உறுதி!

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் களத்திலே வெற்றி பெற்று ஆட்சியமைக்குமானால், தாங்கள் பிரகடனப்படுத்திய கொள்கைக்கோட்பாடுகளுக்கு சட்ட வடிவமும், திட்ட வடிவமும் கொடுத்து நிறைவேற்றிக் காட்டியுள்ளது. அப்படிப்பட்ட வரலாற்றுச் சாதனைகளையும், கடந்த காலத்தில் நிகழ்த்திஇருக்கிறது. எனவே, இந்த 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்திருந்தாலும் அதனால் துவண்டு போய்விடாமல், அறிவியல் அடிப்படையில் ஆய்ந்தறிந்து புறம்தள்ள வேண்டியவைகளைப் புறந்தள்ளிவிட்டு, ஈர்க்கப்பட வேண்டிய சக்திகளை உள்வாங்கிக் கொண்டு அடுத்த அரசியல் தேர்தல் களத்திற்கு எள்ளின் முனையளவு கூட தொய்வின்றி தன் பணிகளை விரைந்து மேற்கொள்ளக்கூடிய அற்புதமான பேரியக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்தத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று, கூட்டணி ஆட்சி அமைத்திருப்பதனால் திராவிட முன்னேற்றக் கழகம் எந்தப் பின்னடைவையும் சந்திக்கப் போவதில்லை. மாறாக, முன்னைவிட பன்மடங்கு உற்சாகத்துடனும், உந்து சக்தியோடும் பணியாற்றுவதற்கான படிக்கட்டாகவே இந்த தோல்வியை திராவிட முன்னேற்றக் கழகம் மாற்றி அமைத்துக் கொள்ளும். தமிழக வெற்றிக் கழகம் இந்த சட்டமன்றத் தேர்தலில் பெற்றிருக்கக் கூடிய வெற்றி என்பது சாதனைகளை அடித்தளமாகக் கொண்ட வெற்றி அல்ல. மாறாக, அறிவியல் நவீன கைபேசித் தொடர்பு மூலம் உருவாக்கிய மாயத் தோற்றத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வெற்றிதான் இந்த தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றி!

இனிவரும் காலங்களில், மக்கள் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் சாதித்த சாதனைகளைவிட இந்த அரசிடமிருந்து எதிர்பார்ப்புகள் அதிகமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், மக்களின் அந்த எதிர்பார்ப்புகளை தமிழ்நாட்டில் ஆட்சி அமைத்துள்ள தமிழக வெற்றிக் கழகம் சாதிக்க முடியுமா? என்பதும் மிகப்பெரிய கேள்விக்குறியாகும்.

இதற்கிடையில் வருங்கால சமுதாயத்தின் வார்படங்களாம் இளைஞர்களுக்கு ஒன்றை தெளிவுபடுத்துவது தங்களின் மூத்த சகோதரன் என்ற அடிப்படையில் எனது கடமை என்பதை உணர்ந்து தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைய இளைஞர்கள்தான் எதிர்கால சமுதாயம். எனவே, அத்தகைய இளைஞர்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்பட்டு, சமுதாயத்தின் ஒளிவிளக்காக உருவாக்கப்பட வேண்டும் என்பதில் தொடர்ந்து அக்கறையும் ஆர்வமும் கொண்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

பேரறிஞர் அண்ணாவின் கடிதங்கள் அனைத்தும் “தம்பிக்கு” என்றுதான் தொடங்கும். முத்தமிழ றிஞர் கலைஞரின் கடிதங்கள் அனைத்தும் “உடன்பிறப்பே” என்றுதான் தொடங்கும், இன்றைய கழகத்தலைவர் தளபதியாரின் கடிதங்கள் அனைத்தும் “உங்களில் ஒருவன்” என்றுதான் தொடங்கும். இந்த முப்பெரும் தலைவர்களின் கடிதங்கள் குறிப்பாக இளைஞர்களுக்காக எழுதப்படுகிறது என்பதை உணர்த்துவதற்காகத்தான் இந்த முப்பெரும் தலைவர்களின் கடிதங்களில் “தம்பிக்கு” என்றும், “உடன்பிறப்பு” என்றும், “உங்களில் ஒருவன்” என்றும் விளிக்கப்படு கிறது.

இதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இளைஞர்களுக்கு விழிப்புணர்வை உருவாக்கிட நடத்தப்பட்ட மேடைப்பேச்சுகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், நாடகங்கள் ஆகிய நிகழ்ச்சிகள் மூலம் பல்வேறு பொருள்கள் பற்றிய கருத்துக்களும், உலகளாவிய செய்திகளும், வரலாறுகளும் பல்வேறு கோணங்களில் எடுத்து வைக்கப்படும், விவாதிக்கப்படும். இந்த நிகழ்வுகளைக் கண்டுகளித்த அறிஞர் பெருமக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை **மாலை நேரத்துப் பல்கலைக்கழகம்** என்று விமர்சிப்பார்கள். இந்த அளவிற்கு இளைஞர்களின்பால் அக்கறை எடுத்துக்கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் இனியும் உரிய கவனமும், அக்கறையும் எடுக்கத் தயங்காது, தொடர்ந்து எந்த நேரமும் தயாராகவே இருக்கும். வற்றாத ஜீவநதியும் வான்மழையும் முறைப்படுத்தப்படா விட்டால், கடல்நீரோடு, பயனின்றிக் கலந்துவிடும். ஆனால், வற்றாத ஜீவநதியையும் வான்மழையையும் அணைகள் மூலம் தடுத்து நிறுத்தி முறைப்படுத்திப் பயன்படுத்தினால் மனித குலத்திற்கு எத்தகையப் பயன்களை விளைவிக்கும் என்பதனை விளக்கத் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

ஏழை பணக்காரன் என்ற வேறுபாட்டை தவிர்த்து ஏழையை வாழ்விக்க வேண்டும் என்ற உணர்வை இளைஞர் மத்தியில் உருவாக்க வேண்டும் என்பதற்காகவே பேரறிஞர் அண்ணாவால் முன்மொழியப்பட்ட “கருத்துப் பெட்டகம்தான்” “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்பதாகும். மக்களாட்சியின் மாண்புகளை உணர்த்தும் முறையில் பேரறிஞர் அண்ணாவால் இளைஞர்களுக்காக தெரிவிக்கப்பட்ட சொல் ஓவியம்தான் “எதையும் தாங்கும் இதயம் வேண்டும்” என்பதாகும். “மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மனமுண்டு” என்ற பொருள் பொதிந்த வாசகங்களாகும்!

இப்படி இளைஞர்களைப் பக்குவப்படுத்தி தமிழ் மண்ணையும், மக்களையும், தமிழ்மொழியையும் காப்பாற்றுவதற்காக வாளாகவும் கேடயமாகவும் பயன்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் இளைஞர்களின் பாசறைதான்.

ஆம்! தமிழக இளைஞர்களின் தாய்வீடும் பாசறையும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை உணர்வீர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாசறை நோக்கி உங்கள் பயணம் தொடரட்டும்!!



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு அரியலூர் மாவட்ட கழக இளைஞரணி சார்பில், லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையம் கே.ஆர்.வி. நடுநிலை பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், அரியலூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் தெய்வ.இளையராஜா ஏற்பாட்டில் மதிய அறுசுவை உணவை அரியலூர் மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் நகர கழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட இளைஞரணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாட்டில் எத்தனை பாலியல் வன்கொடுமைகள்?

# பதற வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் மக்கள்!

### மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. கண்டனம்!

*சென்னை, ஜூன் 18 -* மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து வெளிவரும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் ஒட்டுமொத்த சமூகத்தையும் அதிர்ச்சியிலும் அச்சத்திலும் ஆழ்த்தியுள்ளன.

(15.06.2026) அன்று ஒரே நாளில் மட்டும் சென்னை, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர், தாம்பரம், பூவிருந்த வல்லி உள்ளிட்ட பகுதிகளில் குழந்தை களுக்கு எதிராக நடைபெற்றுள்ள கொடூரச் சம்பவங்கள், தமிழகத்தின் சட்டம்ஒழுங்கு நிலைமை குறித்து மிகுந்த கவலைக்குரிய கேள்விகளை எழுப்புகின்றன.



“தமிழ்நாட்டில் நேற்று எத்தனை பாலியல் வன்கொடுமைகள் நடைபெறுள்ளன?” என்று மக்கள் வேதனையுடனும் பதற்றத்துடனும் கேட்கும் சூழல் உருவாகியுள்ளது.

வளர்ச்சி, முதலீடு, தொழில்நுட்ப முன்னேற்றம் என பெருமையாகப் பேசப்படும் தமிழகத்தில், பெண்களும் பெண் குழந்தைகளும் பாதுகாப்பற்ற சூழலில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது.

போக்சோ சட்டத்தின் கீழ் தொடர்ந்து அதிகரித்து வரும் வழக்குகள், சமூகத்தின் ஒழுக்கச் சீரழிவை மட்டுமல்லாது, குற்றங்களைத் தடுக்க வேண்டிய பாதுகாப்பு அமைப்புகளின் செயல்திறனையும் கேள்விக் குறியாக்கு கின்றன.

குற்றவாளிகள் தண்டனைக்கு அஞ்சாமல் செயல்படுகின்றனர் என்ற உணர்வு மக்களிடையே பரவி வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு என்பது எந்த அரசுக்கும் முதன்மை பொறுப்பாகும்.

“சிங்கப்பெண்” போன்ற திட்டங்களை அரசு மிகுந்த விளம்பரத்துடன் அறிவித்திருந்தாலும், பெண்களும் குழந்தைகளும் அச்சமின்றி வாழும் சூழல் புதிய ஆட்சியில் உருவாகாதது கவலைக்குரியது. குற்றங்கள் நடந்த பின் நடவடிக்கை எடுப்பதை விட, அவை நடைபெறாத சூழலை உருவாக்குவதே அரசின் உண்மையான கடமையாகும். பள்ளிகள், பொதுஇடங்கள், போக்குவரத்து மையங்கள் உள்ளிட்ட இடங்களில் கண்காணிப்பை பலப்படுத்து வதுடன், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வும் தீவிரப்படு த்தப்பட வேண்டும்.

★ஒரு நாகரிகமான சமூகத்தின் உண்மையான அளவுகோல் அதன் பெண்களும் குழந்தைகளும் எவ்வளவு பாதுகாப்பாக வாழ்கிறார்கள் என்பதில்தான் இருக்கிறது. அந்த அடிப்படை பொறுப்பை நிறை வேற்றுவதில் அரசு தோல்வியடையக் கூடாது.

பெண்கள் அச்சமின்றி வாழவும், குழந்தைகள் பாதுகாப்பாக வளரவும் முடியாத சூழல் நீடித்தால், அது எந்த அரசுக்கும் பெருமை அல்ல; அந்த அரசின் மிகப்பெரிய தோல்வியாகவே வரலாறு பதிவு செய்யும் என்று அவர்கூறியுள்ளார்.

### புதுச்சேரி தேர்தலில் “ஃபிரண்ட்லி ஃபைட்”

# யார் ஆடியது என்று புதுச்சேரி மக்களுக்குத் தெரியும்!

### வைத்திலிங்கம் பேச்சுக்கு தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா பதிலடி !

புதுவை, ஜூன் 18-

புதுச்சேரி மாநில தி.மு.க.அமைப்பாளர் இரா.சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது:

புதுச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் அவர்கள் இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ள கருத்துக்கள் அரசியல் உண்மைகளுக்கு முற்றிலும் முரணானவை. கூட்டணியின் தோல்விக்கான காரணங்களை சுய பரிசோதனை செய்யாமல், அதன் முழுப் பொறுப்பையும் திமுக மீது சுமத்த முயற்சிப்பது அரசியல் நேர்மைக்கு உகந்ததல்ல.

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பே, திமுகவிற்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருப்பதால் கூட்டணிக்கு திமுக தலைமை தாங்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் வலியுறுத்தின. இருந்தபோதிலும், காங்கிரஸ் கட்சி தனது தலைமையில் கூட்டணி செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தியது.



கூட்டணி ஒற்றுமையை முன்னிறுத்திய திமுக, தனது அரசியல் வலிமை மற்றும் வளர்ச்சியைப் பொருட்படுத்தாமல் காங்கிரஸ் தலைமையை ஏற்றுக் கொண்டது. கடந்த தேர்தலில் போட்டியிட்ட அதே 13 தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவித்த போதிலும், காங்கிரஸ் தலைமையின் வற்புறுத்தலால் மண்ணாடிப்பட்டு தொகுதி காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டு, அதற்கு பதிலாக கதிர்காமம் தொகுதி திமுகவிற்கு வழங்கப்பட்டது. கூட்டணியின் வெற்றிக்காக திமுக தொடர்ந்து விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயல்பட்டது. அதேபோன்று இந்தியா கூட்டணியில் இடம் பெற்றிருந்த, கூட்டணிக் கட்சிகளான விடுதலை சிறுத்தைகள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் அவர்கள் கேட்ட தொகுதிகளை ஒதுக்கவில்லை. அவர்கள் போட்டியிட்ட தொகுதிகளிலும் காங்கிரஸ் சார்பில் நட்பு சண்டை என்று சொல்லக்கூடிய போட்டி வேட்பாளரை நிறுத்தினர். இதனால் இந்த கட்சிகள் நமக்கு தேர்தல் பணியாற்றிவில்லை என்பது கண்கூடு.

இதற்கிடையில், திமுக வேட்பாளர்கள் வெற்றி பெறக்கூடிய இடங்களில் “ப்ரண்ட்லி ஃபைட்” என்ற பெயரில் ஆறு தொகுதிகளில் காங்கிரஸ் சார்பில் மாற்று வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். கூட்டணி ஒற்றுமையை பாதிக்கும் வகையிலான இந்த அணுகுமுறையையும் திமுக பொறுமையுடன் எதிர்கொண்டது. இருந்தபோதிலும், “ப்ரண்ட்லி ஃபைட்” ஆடிய ஆறு தொகுதிகளில் மூன்று தொகுதிகளில் திமுக வெற்றி பெற்றது. மொத்தத்தில் திமுக போட்டியிட்ட தொகுதிகளில் ஐந்து தொகுதிகளில் வெற்றி பெற்று தனது அரசியல் வலிமையை நிரூபித்தது.

இன்று வைத்திலிங்கம் அவர்கள் கூட்டணிக்கு திமுக தான் தலைமை தாங்கியது, திமுக எதிரியை சரியாக மதிப்பிடவில்லை என்று கூறுவது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. தேர்தல் காலம் முழுவதும் கூட்டணியின் தலைமைப் பொறுப்பை காங்கிரசே ஏற்றதாக தொடர்ந்து வலியுறுத்தி, தேர்தல் வாக்குறுதி அளித்தவர்கள் இன்றோ அதற்கு மாறாக பேசுவது அரசியல் வசதி வாதத்தை மட்டுமே காட்டுகிறது.

கூட்டணியில் அதிக தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்திய காங்கிரஸ், 23 தொகுதிகளில் போட்டியிட்டது. ஆனால் தேர்தல் முடிவுகள் வெளியாகியபோது, 13 தொகுதிகளில் டெபாசிட் இழக்கும் அளவிற்கு மக்கள் ஆதரவை பெறத் தவறியது. இதன் உச்சகட்டமாக, தன்னை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்திக் கொண்டு தட்டாஞ்சாவடி தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் அவர்களே டெபாசிட் இழந்தார்.

மேலும், நீண்ட காலமாக தன்னுடைய அரசியல் செல்வாக்கு கொண்டதாக கருதப்படும் காமராஜ் நகர் தொகுதியில் போட்டியிடாமல், அந்தத் தொகுதியை எதிர் கட்சியான லட்சிய ஜனநாயக கட்சிக்கு விட்டுக் கொடுத்து தட்டாஞ்சாவடியில் போட்டியிட்டது ஏன்? என்ற கேள்வி அப்போது காங்கிரஸ் கட்சியினரிடமே எழுந்தது. தேர்தல் தோல்விக்குப் பிறகும், காங்கிரஸ் கட்சியின் படுதோல்விக்கு மாநில தலைவர் வைத்திலிங்கத்தின் தவறான அணுகுமுறையே காரணம் என்று கூறி, அவரது இல்லத்தை முற்றுகையிட்டு பல்வேறு கட்டப் போராட்டங்களில் அக்கட்சியினரே ஈடுபட்டனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

கூட்டணிக்கு தலைமை தாங்கியது யார்? அதிக தொகுதிகளில் போட்டியிட்டது யார்? தேர்தல் வியூகங்களை வடிவமைத்தது யார்? என்பதற்கு புதுச்சேரி மக்களுக்கே பதில் தெரியும். அத்தகைய சூழலில், தேர்தல் தோல்விக்கான முழுப் பொறுப்பையும் திமுக மீது சுமத்தும் முயற்சி உண்மையை மறைக்கும் அரசியல் நாடகம்.

திமுக எப்போதும் கூட்டணி தர்மத்தையும், அரசியல் நாகரிகத்தையும் கடைபிடித்து வந்துள்ளது. தேர்தல் தோல்வி ஏற்பட்டால் அதன் காரணங்களை நேர்மையாக ஆராய்வதே ஜனநாயக அரசியலின் அடிப்படை. அதற்கு மாறாக கூட்டணிக் கட்சிகளை குறிவைத்து குற்றம் சாட்டுவது தோல்விக்கான காரணங்களை மறைக்கும் முயற்சியாகவே பார்க்கப்படும்.

எனவே, புதுச்சேரி அரசியலில் முதிர்ந்தஅனுபவம்பெற்றுள்ள வைத்திலிங்கம் அவர்கள் உண்மைகளைத் திரித்து பேசுவதை நிறுத்தி விட்டு, புதுச்சேரி மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஏன் மக்களின் நம்பிக்கையை இழந்தது என்பதை முதலில் சுயபரிசோதனை செய்ய வேண்டும். திமுக மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டு களை முன் வைப்பதன் மூலம் வரலாற்று உண்மைகளை மாற்ற முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.



கழக தொழிலாளர் அணி செயலாளர் பிடிசி.ஜி.செல்வராஜ் இல்லத் திருமண விழாவில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தி.மு.க. பணியாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் வி. ஜெகதீசன், பி. ஜீவரத்தினம், எம்.தீபா, என்.செல்வராஜ், கே. ராஜாமுத்தையா, சி. சீனிவாசன், டி.தவமணி, வி. கண்ணன் மற்றும் கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் டாக்டர் ஆர்.வரதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

### கோவையில் இரும்புக் கம்பியால் தாக்கி

# கல்லூரி மாணவரிடம் 2 பவுன் நகை பறிப்பு!

கோவை, ஜூன் 18-

கோவையில் இரும்பு கம்பியால் தாக்கி, கல்லூரி மாணவரிடம் 2 பவுன் நகை பறித்து விட்டு, அவரை அறையில் அடைத்து வைத்து ரூ.2 லட்சம் கேட்டு மிரட்டிய கும்பலை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையை சேர்ந்தவர் ராஜ மாணிக்கம் மகன் கேசவன் (19). இவர், கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் பி.காம் 3ம் ஆண்டு படித்து வருகிறார். குனியமுத்தூர் இபி காலனியில் நண்பர் தரணீஸ் என்பவருடன் சேர்ந்து அறை எடுத்து தங்கி கல்லூரி சென்று வருகிறார். நேற்று முன்தினம் கேசவன் வெளியே சென்றுவிட்டு தனது அறைக்கு திரும்பிய போது அவரது அறையில் மேலும் 5 பேர் இருந்தனர்.

அவர்கள் கேசவனிடம் தகராறு செய்தனர். பின்னர், அவரை இரும்பு கம்பியால் தாக்கி அவர் அணிந்திருந்த 2 பவுன் தங்க செயினை பறித்தனர். மேலும், கேசவனை அறையில் அடைத்து வைத்ததுடன் ரூ. 2 லட்சம் கொடு த்தால் தான் வெளியே விடுவோம் என மிரட்டினர். இதனை அறிந்து பக்கத்து அறையை சேர்ந்த சிலர் காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில், குனிய முத்தூர் காவல்துறையினர் அங்கு வந்தனர். அவர்கள் வருவதை அறிந்ததும், அந்த கும்பல் முதல் மாடியில் இருந்து கீழே குதித்து அங்கிருந்த பைக்குகளில் தப்பி சென்றனர்.

இதுகுறித்து கேசவன் அளித்த புகாரின் பேரில், குனியமுத்தூர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். அதில் கேசவனிடம் நகை பறித்து அறையில் அடைத்து வைத்து பணம் கேட்டு மிரட்டியது ஆகாஷ், பாண்டி உள்பட 5 பேர் கும்பல் என்பது தெரியவந்தது. காவல்துறையினர் அவர்களை தேடி வருகின்றனர்.